**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 27/2022 LW- 1 PW-1

| | |
|---|---|
| Name | பூமணி |
| Husband/Father Name | இளங்கேஸ்வரன் |
| Village /Area | அம்மூர் |
| Taluk | |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 44 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 26.08.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரிகள் 1–3 வரை ஆஜர். )**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 05.03.2022 அன்று மாலை 4.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது 1 ம் எதிரி பாண்டின் எனது வீட்டிடம் வந்து வெளி ஊரில் இருந்து வந்து எங்கள் ஊரில் எங்கள் வீட்டிற்கு எதிரில் வீடு கட்டிக்கொண்டு வாழ்கிறாயே என்று தினமும் பிரச்சனை செய்து வந்தார். எனது கணவர் இராணுவத்தில் பணி புரிவதால் அவர் என்னோடு இல்லை. வயதுக்கு வந்த பெண்ணை வைத்துக்கொண்டு எவ்வாறு நீ வாழ்கிறாய் என்று என்னிடம் 1 ம் எதிரி கூறினார். ஆஜர் எதிரிகள் மூவரும் சேர்ந்து என்னை தெவிடியா என்று திட்டி உனது இரண்டு பிள்ளைகளும் வெவ்வேறு நிறங்களில் உள்ளது என்றும் அந்த குழந்தைகளை யாருக்கு பெற்றெடுத்தாய் என்றும் அசிங்கமா பேசினார்கள்.

பின்பு 1 ம் எதிரி பாண்டியன் அணிந்திருந்த செருப்பை கழற்றி என்னை கீழே தள்ளி எனது கண்ணம் மற்றும் தலை, முதுகு பகுதியில் செருப்பால் அடித்து என்னை அசிங்கப்படுத்தினார். எனது உடையை கிழித்து அசிங்கப்படுத்தினார். வெளியூரிலிருந்து இங்கு வந்து வீடு கட்டியதால் அந்த வீட்டை காலி செய்து கொண்டு செல்லும் வரை உன்னிடம் தொடர்ந்து பிரச்சனை செய்வோம் என்றும் மேலும் உன்னை என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்றும் கூறினார்கள். மேலும் காலி செய்யவில்லை என்றால் ஆட்களை வைத்து உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். பின்பு இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் போலீசாரிடம் நான் கொடுத்ததாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் புகார் கொடுத்த போது புகாருடன் சேர்த்து எதிரிகள் எங்களை தாக்கியதை செல்போனில் வீடியோவாக பதிவு செய்து அதை குறுந்தகடில் பதிவு செய்து புகாருடன் சேர்த்து போலீசாரிடம் ஒப்படைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வழக்கறிஞர் நேரம் கோரியதால் அனுமதி நிராகரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 27/2022 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | வளர்மதி |
| Husband/Father Name | குமார் |
| Village /Area | அம்மூர் |
| Taluk | |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 45 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 26.08.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரிகள் 1–3 வரை ஆஜர். )**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 யை தெரியும். கடந்த 05.03.2022 அன்று மாலை 4.00 மணியளவில் அ.சா.1 ன் தெருவில் ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் சண்டை ஏற்பட்டது. அப்போது திடீர் என்று 1 ம் எதிரி செருப்பை எடுத்து அ.சா.1 ன் கன்னத்தின் மீது அடித்தார். நான் 1 ம் எதிரி பாண்டியனிடம் ஏன் அவரை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு உனக்கு ஒன்றும் தெரியாது நீ அமைதியாக இரு என்று என்னிடம் கூறினார். அதன் பின்பு நான் குடியிருந்த வீட்டின் உரிமையாளர் என்னை வீட்டை காலி செய்யுமாறு தெரிவித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வழக்கறிஞர் நேரம் கோரியதால் அனுமதி நிராகரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.08.28 16:30:45 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.